செய்திக் குறிப்பு dt: 08.02.2018

காரைக்கால் மாவட்டத்தில் 18-வது காய். கனி. மற்றும் மலர் கண்காட்சி வரும் 16, 17. மற்றும் 18.2.2018 வரை மூன்று நாட்கள் நடைபெற உள்ளது. மாவட்ட நிர்வாகம் மற்றும் வேளாண்துறை மூலம் நடைபெறும் இவ் மலர்கண்காட்சிக்கான இரண்டாவது ஆலோசனை கூட்டம் இன்று 4.ம மணியளவில் மாவட்ட ஆட்சியர் திரு. R. கேசவன். இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. 40 இலட்சம் செலவில் இந்த 18-வது மலர் கண்காட்சி நடைபெற உள்ளது. காரைக்கால் அமைந்துள்ள சந்தைத் திடலில் இந்த மூன்று நாள் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் ~~ஸ்~~ ஸ்டால் அமைப்பதற்கு அரசுத்துறைகளுக்கு இலவசமாகவும் தனியாருக்கு பணம் வசூலிப்பது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சியில் முதல் நாள் பள்ளிகளுக்கு இடையே ஆடல் போட்டிகளும் இரண்டாம் நாள் சேது குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் மூன்றாம் நாள் உள்ளூர் கலைஞர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் மூன்று நாட்களும் அரங்கு மற்றும் இதர இடங்களை சுத்தம் செய்ய நகராட்சி மற்றும் Hand in Hand உடன் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் சிற்றுண்டி மற்றும் சுகாதாரமான குடிநீர் சுகாதாரமான கழிப்பறைகள் பாதுகாப்பான Parking போன்றவை ஏற்படுத்தவும் என்றும் மேலும்

-2-

பத்துக்கும் மேற்பட்ட CCTV - கேமிராக்கள் பொருத்தப்பட்டு காவல் துறையினரால் 24 மணி நேரமும் கண்காணிக்கப்படும் என்றும் ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார். மேலும் மின்துறை தடையில்லா மின்சாரம் - அளிக்கவும் கோரப்பட்டுள்ளது. போட்டிகள் நடத்தப்பட்டு இதே நாள் பரிசளிப்பு நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது என்றும் கூட்டத்தில் ஆய்வு செய்தார்கள். உடன் வேளாண்துறை இயக்குநர் டாக்டர். இராமமூர்த்தி. உதவி மாவட்ட ஆட்சியர் திரு. மங்கலட் தினேஷ். காவல் துறை கண்காணிப்பாளர் திரு. வம்சீத ரெட்டி, Pajanco - Dean - திரு. கந்தசாமி, உதவி வேளாண் இயக்குநர் திரு. மதியழகன் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

8/7/18